தமிழர் பேரவை
TAMILS REPRESENTATIVE COUNCIL
[ESTB 1951]

# பேரவை PERAVAI

Issue: 02/2008

M.I.C.A (P) NO. 222/07/2008 | தமிழுக்கும் தமிழருக்கும் வளம் சேர்ப்போம் | ஆகஸ்ட் 2008 | August 2008

## Tamil Language Festival 2008



*Mr. Iswaran and leaders of TRC admiring the performance*

In conjunction with this year's Tamil Language Festival TRC together with STTU and New Town Primary School organised a forum "Progress with Tamil" to create awareness in Tamil pupils on the importance of developing Tamil language skills. It was held on 19 April 08 at MDIS UniCampus. Mr S Iswaran, Senior Minister of State for Trade and Industry was the Guest of Honour.

More than 600 students from the Upper Primary and Lower Secondary levels participated in the event. About 200 Teachers & Parents were also present. Guest Speakers were Dr T Chandroo and Mr Vadivazhagan. Highlight of the event

*continued on pg 3*

> "Students clamouring to ask questions in Tamil"

## தமிழ் மொழி விழா 2008



*The hall filled with students*

இவ்வாண்டின் தமிழ் மொழி விழாவின் ஒரு அங்கமாக, "தமிழோடு வளர்வோம்" என்னும் கருத்தரங்கிற்கு தமிழர் பேரவை ஏற்பாடு செய்திருந்தது. சிங்கப்பூர் தமிழ் ஆசிரியர் சங்கமும், நியூ டவுன் தொடக்கப்பள்ளியும் இதற்கு கூட்டு ஆதரவு அளித்தன. 19.4.2008 அன்று MDIS வளாகத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கத்திற்கு, தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் மூத்த துணை அமைச்சர் திரு எஸ் ஈஸ்வரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்தார்.

மாணவர்களிடையே மொழித் திறனை வளர்க்கவும் அவர்களை தமிழில் பேச ஊக்குவிக்கவும் இக் கருதரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

*பக்கம் 3ல் தொடரும்*

## VISIT TRC WEBSITE

**www.trc.org.sg**

Affiliates are encouraged to send us details of their activities which will be loaded within 2 working days. Only the English version is now available as the Tamil version is under construction. Members are encouraged to visit our website where you can view photo galleries of our activities and download past copies of our Newsletters, Annual Reports etc.

## பேரவையின் வலைப்பக்கம்

**www.trc.org.sg**

பேரவையின் வலைப்பக்கம் புத்துயிர் பெற்று, இப்பொழுது புதிய வடிவத்தில் உங்களுக்கு காட்சி தருகிறது. பேரவையின் நடப்பு நிகழ்ச்சிகள், நடத்தப்பட்ட அங்கங்களின் செய்திகள், படங்கள் போன்றவை உடனுக்குடன் வலைப்பக்கத்தில் காணலாம். பேரவையின் ஆண்டறிக்கைகள், பழைய செய்திக்கடிதங்களும் இங்கே பார்க்கலாம். பேரவை உறுப்பினர்களும், மற்றவர்களும் வலைப்பக்கத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்வது நன்று.

## Unity Under one Umbrella

(43rd National day Celebrations)

TRC has for the past 3 years been in the forefront in organizing the National Day Celebrations on behalf of the Tamil Community. Under the theme, "Unity Under One Umbrella", the event is a showcase for the unity, cohesiveness and cooperation amongst the various Tamil based Community Organisations in Singapore.

**30th August 2008**

This year's event will be held on Saturday, 30th August 2008 at The Grassroots Club in Yio Chu Kang. The event is once again organized with the support of TRC's 30 Affiliate organizations.

As in the past the event will also witness the presentation of TRC's Excellence

*continued on pg 2*

## ஒரு குடையின் கீழ் இணைவோம்

(43 வது தேசிய தினக் கொண்டாட்டங்கள்)

கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டாடப்படும் தேசிய தின விழா இவ்வாண்டும் மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படவுள்ளது. "ஒரு குடையின் கீழ் இணைவோம்" என்னும் இக்கொண்டாட்டத்தின் வழி, சிங்கப்பூரின் பல்வேறு தமிழ் அமைப்புகள் மற்றும் தமிழ் சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஒன்று கூடி, ஒற்றுமையாக நாட்டின் சுதந்திர தினத்தை கொண்டாடுவதன் வழி நாட்டுப்பற்றையும், புரிந்துணர்வையும் ஒத்துழைக்கும் மனப்பான்மையையும் வளர்க்க இந்நிகழ்ச்சி உதவும் என நம்பலாம். சனிக்கிழமை, 30.8.2008 அன்று இயோ சூ காங்கில் உள்ள அடித்தள அமைப்புகள் மன்றத்தில் இது நடைபெறவுள்ளது. பேரவையின் இணை அமைப்புகள், தமிழர் பேரவையின் கூட்டுறவு அமைப்பு மற்றும் இதர

*பக்கம் 2ல் தொடரும்*

*Unity under one Umbrella continued from pg 1*

Awards to the top Tamil students in last year's PSLE, GCE 'O' and 'A' level examinations. Our annual National Day Community Excellence Award will also be presented to a selected Community Leader. The event promises excellent entertainment from local and Malaysian artistes coordinated by The Sirpigal, one of our Affiliates. Buffet dinner by Gayatri Restaurant and lucky draws will add spice to the event.

Tickets at $250/- per table are now available for booking. Sponsor tables at $1,000/- and $3,000/- are also available. All funds raised will go towards TRC's 'Kandasamy Education Trust Fund'. The fund has been providing financial assistance to low income families and needy students for the past 5 years. Annually TRC gives out bursaries and scholarships amounting to more than $25,000/-.

> "All funds raised will go towards TRC's 'Kandasamy Education Trust Fund'"

Please contact us at Tel. No. 63366316 for bookings and enquiries. Please come forward and support towards a noble cause and at the same time join in the celebration of our Independence.

*பக்கம் 1ன் தொடர்ச்சி*

அமைப்புகளின் ஆதரவுடன் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும் மாணவர்களுக்கான சாதனை விருதுகளும், சமூகச் சாதனை விருதும் இவ்வாண்டும் சிங்கப்பூரின் சிறந்த தமிழ் மாணவர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகத் தலைவருக்கும் வழங்கப்படும்.

இவ்விருந்திற்கான $250 நுழைவுச்சீட்டுகள் (1 மேசை) விற்பனையில் உள்ளது. இந்நிகழ்ச்சியின் வழி திரட்டப்படும் நிதி அனைத்தும் பேரவையின் 'கந்தசாமி கல்வி அற நிதிக்கு' வழங்கப்படும். நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் $1,000க்கு மேல் வழங்கி நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ளலாம். குறைந்த வருமான குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பேரவை ஆண்டு தோறும் வழங்கும் நிதி உதவிகளுக்கு இந்த அற நிதி பயன்படுத்தப்படும். மான்புமிகு நிதி அமைச்சர் திரு தர்மன் சண்முகரத்தினம் இதில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொள்கிறார்.

மேல் விவரத்திற்கும், நுழைவுச் சீட்டுகளுக்கும் உடனே தொடர்புக் கொள்ளுங்கள். எங்கள் தொலைபேசி எண்: 63366316.

# GIRO Member

We thank you for giving us the opportunity to serve the Community. However TRC wants to do more for the Tamil Community. Excelling in Education is one key aspect of ensuring that our children are better-off and successful in the future. TRC has plans to organise enrichment programmes and provide financial assistance to more children. To do all these and more, TRC needs more than $50,000.00 annually. TRC has been fortunate in getting well-wishers and Corporate Organisations to donate towards its programmes.

### Educational Assistance

TRC has been giving out bursaries to students from low-income families and presenting Excellence Awards to those Tamil students who excel in their examinations. To date more than 1000 students have benefited from our bursaries receiving more than $80,000.00. The Excellence Award has been presented to 30 students, who have received more than $10,000.

Our Tuition programme has over the years benefited some 40,000 students. More than 1,500 students and families have benefited through our bursary awards and study awards with MDIS.

We are now in the process of acquiring an office premise or a building which our Community can relate to and consider as belonging to the Tamil speaking Community.

> "Special GIRO Draw"

### To realize our dream

To continue with our community efforts, it is important that we have funds and that the Community has a stake in raising these funds. And one avenue is through our GIRO subscription. This will be a monthly contribution of a minimum of $5.00. From this $2.00 will go towards your membership fees and $1.00 each to our Building, Education and Cultural Funds. These funds have been setup to provide for our activities and to realize our dream of a building for the Tamil Community. This will also ensure that you do not default in your annual subscriptions and at the same time allow you to contribute to our community efforts.

Members who convert their ordinary membership to GIRO membership and new GIRO members are eligible to enter our special GIRO DRAW 2008. Prizes range from air tickets to India and Bangkok and NTUC vouchers. Hurry! This offer is only until October 2008.

Members will also be entitled to discounts at leading retailers in Little India, like Jothi Stores and Gayatri Restaurant.

# GIRO உறுப்பினர்

சமூகத்திற்கு சேவையாற்ற வாய்ப்பு அளித்த அனைவருக்கும் பேரவை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆயினும் இது போதாது. தமிழ் சமூகத்திற்கு மேலும் பல உதவிகள் செய்ய பேரவை திட்டமிட்டுள்ளது. நமது சமுதாயம் முன்னேற, நமது பிள்ளகைள் கல்வியில் சிறப்புற வேண்டும். கல்வியே வாழ்க்கையின் வெற்றிக்கு அடிக்கல். மேலும் அதிக-மான மாணவர்களுக்கு நிதி உதவி அளிக்கவும், அவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற உதவும் பல நடவடிக்கைகளை நடத்தவும், வருடம் தோறும் சுமார் $50,000 தேவைப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக 1,000க்கு மேற்பட்ட மாணவர்கள் $80,000க்கு மேல் நிதி உதவி பெற்றிருக்கிறார்கள். கல்வியில் சாதனை புரிந்த 30க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு $10,000க்கு மேல் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

பேரவையின் கல்வி உதவி திட்டத்தின் வழி 40,000 மாணவர்களுக்கு மேல் பயன் அடைந்துள்ளனர். சிங்கப்பூர் நிர்வாக மேம்பாட்டு கழகம் (MDIS), பேரவையுடன் இணைந்து வழங்கும் கல்வி விருதுகள் வழி 1,500 க்கு மேற்பட்ட மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். பேரவை தற்பொழுது, ஒரு சொந்த அலுவலகத்தை வாங்க முயற்சி எடுத்து வருகிறது. இக் கட்டடத்தின் வழி தமிழ் சமூகத்திற்கு என ஒரு கட்டடம் என்னும் நிலை உறுதிப்படுத்தப்பட்டு அனைத்து தமிழ் அமைப்புகளும் பயனடைய இது உதவும். இது போன்ற பல பயனளிக்கக்கூடிய திட்டங்களை நடத்திட சமூகத்தின் ஆதரவு எங்களுக்கு தொடர்ந்து கிடைக்கவேண்டும். பேரவையில் தொடர்ந்து அங்கம் வகித்து, அதற்கு நிதி ஆதரவு அளித்து, உங்கள் பங்கை செய்ய முன் வாருங்கள். மாதா மாதம் குறைந்தது $5.00 'GIRO' மூலம் பேரவைக்குச் செலுத்துங்கள். உங்களது $5.00, ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சேர்ந்தால் வருடத்திற்கு $60,000க்கு மேல் வரும். பேரவையும் தனது கனவுகளை நனவாக்கலாம். தமிழர்களுக்கு என ஒரு கட்டடம், தமிழர்களுக்கு என ஒரு அமைப்பு, தமிழர்களுக்கு என கொண்டாட்டங்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

'GIRO' திட்டத்தில் சேரும் அனைவருக்கும் அன்பளிப்புகளும், சிறப்பு அதிர்ஷ்ட குலுக்கலும் காத்துக் கொண்டிருக்கிறது. உறுப்பினர்களுக்கு, அங்காடிக் கடைகளிலும் சிறப்புச் சலுகை-கள் காத்துக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுதே சேருங்கள்! நமது சமூகம் முன்னேற உதவுங்கள்!

Tamil Language Festival 2008 continued from pg 1

பக்கம் 1ன் தொடர்ச்சி




TRC President honouring the Guest-of-Honour



Eager students



The panel of speakers

was the number of students clamouring to ask questions and willing to speak in Tamil.

The forum aims to emphasize the importance of spoken Tamil and explore ways to encourage and increase the usage of the language. The forum also served as a stage for our Community leaders to encourage the use of the Language as a fun and modern Language and that our students or youths should not shy away or be afraid in using the Language.

600க்கு மேற்பட்ட மாணவர்களும் சுமார் 200 ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இதில் கலந்துக் கொண்டனர். டாக்டர் சந்துரு அவர்களும் திரு வடிவழகன் அவர்களும் சிறப்புரை ஆற்றினர். கேள்வி-பதில் அங்கத்தின் போது, கேள்விகள் கேட்க அலைமோதிய மாணவர்களின் எண்ணிக்கை இன்னும் நினைவில் நிற்கிறது. கருத்தரங்கின் வழி மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு, சமூகத்தலைவர்கள் மாணவர்களுடன் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.

# Feedback

In line with our objectives, TRC in its effort to promote the Tamil Language and the status of the Tamil speaking Community has been actively making representations to the various Government agencies where appropriate.

### Discussion with SINDA

A dialogue session was held with the Directors of SINDA on 17 April 2008. TRC and SINDA officials had an interesting and ground-breaking session and a number of issues were raised and discussed frankly.

TRC has also sent correspondences to various authorities on the lack of Tamil signage at major Public places and Parks.

### More support for Tamil

Following last year's dialogue session with Dr Balaji Sadasivan, where he had assured TRC and its Affiliates that the Government is aware of the sentiments and feelings of the Tamil Community, the Tamil Language has received more support. This is evident at the annual Tamil Language Festival.

Members are encouraged to visit our website to give feedbacks for TRC to raise to the respective Government agencies.

# கருத்து பரிமாற்றங்கள்

தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பேரவை அவ்வப்போது அரசாங்க அமைப்புகளுடன் தேவைப்பட்ட கருத்து பரிமாற்றங்களைச் செய்து வருகிறது.

### சிண்டாவுடன் கலந்துரையாடல்

17.4.2008 அன்று பேரவை சிண்டாவின் இயக்குனர்களுடன் கலந்துரையாடல் நடத்தியிது. பல தரப்பட்ட கருத்துக்களும், பரிந்துரைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.
பொது இடங்களில் தமிழில் அறிவிப்புப் பலகைகள் இல்லாதது பற்றியும்; பொது நிகழ்ச்சிகளில் தமிழ் பயன்படுத்தப்படாதது பற்றியும், குறிப்பிட்ட அரசாங்க அமைப்புகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

### தமிழுக்கு அதிக ஆதரவு

கடந்த ஆண்டு டாக்டர் பாலாஜி சதாசிவனுடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பிறகு, அரசாங்கம் தமிழ் மொழிக்கு அதிக ஆதரவு அளிப்பதை நாம் காணமுடிகிறது. இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் தமிழ் மொழி விழா இதற்கு சான்று. விரைவில் வரவிருக்கும் வசந்தம் ஒளி அலை மற்றொரு சான்று. நமது சமூகத்தின் பிரச்னைகளை அரசாங்கம் அறிந்துள்ளது பற்றி டாக்டர் பாலாஜி உறுதி அளித்துள்ளார்.

**Congratulations** to our Council member Kunasegaran for being nominated to join the Hindu Endowment Board. This will foster greater ties within our community

**இந்து அறக்கட்டளை வாரியத்தில் செயலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள பேரவையின் மேலாண்மை உறுப்பினர் திரு குணசேகரனுக்கு எங்களின் நல்வாழ்த்துக்கள்.
சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்க இது மேலும் உதவும்.**

# Legal Clinic in Tamil

Good news for members of the Tamils Representative Council, its Affiliate Organization members and members of the TRC Multipurpose Cooperative Society.

### Qualified Lawyers

TRC will be commencing its free legal clinic which will provide free basic legal advice and information. Qualified Lawyers will be available for consultation on a one-to-one basis. TRC is starting this clinic to assist members who need advice on personal matters and or business matters pertaining to the laws of Singapore. All sessions are limited to 15 minutes per person and will be kept confidential.

All advice and information given at these sessions shall be as a matter of guidance and comfort only and is not intended to replace, substitute or supplement legal advice and any legal action that may be needed in each case. The volunteer lawyers are bound by law not to act any further for those attending these free legal clinics.

### Register Now

Members, who wish to seek help, must first register before they can attend the Legal Clinic. To register, please visit our website **www.trc.org.sg** for online application or obtain an application form in person at our Office. The legal clinic will be held on every 2nd Monday of the month from 7.30 pm to 9.30 pm. Attendance is strictly by prior registration only. Walk-In cases will not be entertained. Closing date for registration is the last Friday of each month.

> "Closing date for registration is the last Friday of each month."

Members who are attending must bring their Identity Cards and all relevant documents pertaining to their matter. There are no fees involved, but all members must sign an Indemnity Form stating that you will not seek any damages or claim for the advice given at the legal clinic.

### Legal Clinic in Tamil and English

Members must be present 15 minutes before the allocated time. If a member misses an appointment, he must re-register for another session. The legal clinic will be conducted in Tamil and English only. Each session is limited to 15 minutes only. The legal clinic provides preliminary basic legal advice and information. Where necessary, TRC Management Members on duty will assist in referring you to where you can get further help.

Our Contact:

Tamils Representative Council
1 Sophia Road
#03-08 Peace Centre
Singapore

Tel: 6336 6316    Fax: 6333 5616
Email: tamilsrep@yahoo.com.sg
Website: www.trc.org.sg

> "The only thing necessary for the triumph of evil is for good men to do nothing."
>
> *Edmund Burke*
> *British statesman and political philosopher*
> *1729 - 1797*

# இலவச சட்ட உதவி

தமிழர் பேரவை மற்றும் அதன் இணை அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ஒரு நற்செய்தி.

தமிழர் பேரவை, தனது இலவச சட்ட உதவித் திட்டத்தின் கீழ், உறுப்பினர்களுக்கு சட்ட ஆலோசனை மற்றும் சட்டம் சம்பந்தப்பட்ட தகவல்களை, எல்லோரும் நன்கு புரியும்படி இலவசமாக வழங்கவுள்ளது.

அனுபவம் வாய்ந்த, தேர்ச்சி பெற்ற வழக்கறிஞர்கள் இச்சேவையை வழங்கவுள்ளனர். சிங்கப்பூரின் சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப தங்களது சொந்த பிரச்னைகள் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு ஆலோசனை வழங்கி உறுப்பினர்களுக்கு உதவும் வகையில் இச்சேவைத் தொடங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் வழி வழங்கப்படும் தகவல் மற்றும் ஆலோசனை, பொதுவான சட்ட ஆலோசனையே தவிர, தனிப்பட்ட பிரச்னைகளுக்கு ஏற்ப வழங்கப்படுவன அல்ல.

இலவச சட்ட ஆலோசனையில் கலந்துகொள்ள விரும்பும் உறுப்பினர்கள், முன்கூட்டியே பதிவுச் செய்துகொள்ள வேண்டும். பேரவையின் அலுவலகத்திற்கு நேரில் வந்து பதிவுப் பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதம் இரண்டாவது திங்கட்கிழமைகளில் மாலை 7.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை இடம்பெறும். முன் பதிவு செய்துக்கொள்பவர்கள் மட்டுமே இச் சேவையில் பங்கேற்க முடியும். மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமைக்குள் பதிவுச் செய்துகொள்ள வேண்டும். பேரவையின் வலைப்பக்கத்திலும் உறுப்பினர்கள் பதிவுச் செய்துகொள்ளலாம்.

உறுப்பினர்கள் தங்களது அடையாள அட்டை மற்றும் தங்கள் பிரச்னை சம்பந்தப்பட்ட அனைத்துப் பத்திரங்களையும் கொண்டு வர வேண்டும். இத் திட்டத்தில் கலந்துகொள்ள கட்டணம் ஏதும் இல்லை. இச் சேவை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இடம்பெறும். ஒவ்வொருவருக்கும் 15 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்படும்.

இது பற்றி மேலும் தகவல் அறிய எங்களின் தெலைபேசி எண்: 63366316 வழி தொடர்புக் கொள்ளலாம்.

> "அநீதி வெற்றி பெறுவதற்கு நல்லவர்கள் மௌனமாய் இருந்தால் போதும்"
>
> *எட்மன் பர்க்*